**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| | | | |
|---|---|---|---|
| 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 6–ம் நாள் வெள்ளிக்கிழமை வாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண்.44வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி உதவியாளர் திருமதி. பாண்டிச்செல்வி என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
| பெயர்: | **இந்திரா** | தொழில்: | |
| த.பெ: | | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

**06.03.2026 OS.221/2019 வா.சா.1 இந்திரா**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1) எனது தாத்தா பெயர் அய்யாவு என்ற வீரணன் அம்பலம் என்றால் சரியல்ல அவர் பெயர் வீரணன் அம்பலம் ஆகும். எனது தாத்தாவின் உடன் பிறந்த சகோதரரின் பெயர் ஊர்க்காவலன் அம்பலம் என்றால் சரிதான். எனது தாத்தாவின் தகப்பனார் பெயர் பொ.வீரணன் அம்பலம் என்றால் சரியல்ல பொன்னுச்சாமி அவரது பெயர் ஆகும். எனது தாத்தா வீரணன் அம்பலமும் அவரது உடன் பிறந்த சகோதரரான ஊர்க்காவலன் அம்பலமும் அவர்களுடைய பூர்வீக சொத்துக்களை பாகம் பிரித்துக்கொண்டனர் என்றால் அது பற்றி எனக்கு சரியாக தெரியவில்லை.

2) சர்வே எண். 96/9 ல் கண்ட மொத்த விஸ்தீரனம் 96 சென்டில் தலா 48 சென்ட் என வீரணன் அம்பலமும் ஊர்க்காவலன் அம்பலமும் பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது எனது தகப்பனார் சொத்தை பற்றி மட்டும் தான் எனக்கு தெரியும். எனது தகப்பனாருக்கு எனது தாத்தா வீரணன் அம்பலத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற சொத்துக்கள் பற்றிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனது தாத்தாவிடமிருந்து அனைத்து சொத்துக்களுமே எனது தகப்பனாருக்கு கிடைக்கப்பெற்றது.

3) எனது அப்பத்தா காளியம்மாளுக்கு தனியாக சொத்துக்கள் இருந்தது என்றால் எனது தாத்தாவின் தம்பி ஊர்க்காவலன் அம்பலத்திடமிருந்து எனது அப்பத்தா காளியம்மாள் சொத்துக்கள் வாங்கினார். அந்த சொத்துக்களை எனது அப்பத்தா காளியம்மாள் அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான்.

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.03.06 14:00:52 +0530

எனது அப்பத்தா புல எண். 96/9 ல் வடபுறம் 48 சென்ட்டை ஊர்க்காவலன் அம்பலத்திடமிருந்து கிரையம் வாங்கி அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான் அது எனது தந்தையின் பங்கு ஆகும். புல எண்.96/9 ல் தென்புறம் உள்ள 48 சென்டை எனது தாத்தா வீரணன் அம்பலம் அனுபவம் செய்து வந்தார் என்றால் அது பற்றி எனக்கு சரியாக ஞாபகமில்லை.

4) எனது தாத்தா வீரணன் அம்பலத்திற்கு 2 மனைவிகள் என்றால் சரிதான். எனது அப்பா எனது தாத்தாவின் மூத்த தாரத்தின் பிள்ளை என்றால் சரிதான். எனது தாத்தா வீரணன் அம்பலம் அவரது பிள்ளைகளான ஊர்க்காவலன் அம்பலம், ஆண்டி அம்பலம், சின்னவீரணன் அம்பலம், பெரியசாமி அம்பலம், மைனர் பொன்னுச்சாமி ஆகிய 6 பேரும் 1961 ம் ஆண்டு ஜூலை மாதம் 19 ம் தேதி ஆவண எண். 1931/1961 மூலம் எனது தாத்தா வீரணன் அம்பலத்திற்கு பாத்தியப்பட்ட பல சொத்துக்களை பாக பிரிவினை பத்திரம் மூலம் பாகம் பிரித்துக்கொண்டனர் என்றால் ஆவணங்களை பார்த்தால் தான் சொல்ல முடியும்.

5) அவ்வாறு பாகம் பிரித்துக்கொண்டதில் வழக்கு சொத்தான புல எண். 96/9 ல் தென்புறம் உள்ள 48 சென்டை தலா 6 சென்ட் வீதம் எனது தாத்தாவும் அவரது பிள்ளைகளும் பிரித்துக்கொண்டார்கள் என்றால் ஆவணங்களை பார்த்தால் தான் சொல்லமுடியும். மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் C Schedule ல் கண்ட சொத்துக்கள் எனது தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் ஆவணங்களை பார்த்தால் தான் சொல்லமுடியும். மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் A Schedule ல் கண்ட 5ம் இலக்க சொத்தான சர்வே எண்.96/9 ல் நான்குமாலில் காளியம்மாள் இடத்திற்கு தெற்கு என குறிப்பிடப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் ஆவணங்களை பார்த்தால் தான் சொல்லமுடியும்.

6) எனது அப்பத்தா காளியம்மாள் ஊர்க்காவலன் அம்பலத்திடமிருந்து பெற்ற சொத்தை கடந்த 27.06.1966 ம் தேதியில் ஆவண எண். 847/1966 மூலம் ஆதித்தனார் கல்வி அறக்கட்டளைக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி கிரைய பத்திரத்தில் எனது தகப்பனார் ஆண்டி அம்பலமும் அப்போதைய மேலராங்கிய கிராம பஞ்சாயத்து தலைவர் ராமன் அம்பலமும் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.03.06 14:01:03 +0530

மேற்படி எனது அப்பத்தா ஆதித்தனார் கல்வி அறக்கட்டளைக்கு கிரையம் கொடுத்த விவரமும் அந்த கிரையப் பத்திரத்தில் எனது தகப்பனார் சாட்சி கையொப்பம் செய்த விவரமும் எனக்கு நன்கு தெரியும் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

7) தாவா சொத்தை கடந்த 18.04.1994 ம் தேதியில் ஆவண எண். 265/1994 மூலம் இந்த நம்பர் பிரதிவாதி மேற்படி ஆதித்தனார் கல்வி அறக்கட்டளையிடமிருந்து கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. இந்த நம்பர் பிரதிவாதி கிரையம் வாங்கியதாக ஆவணங்கள் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் அப்படி எந்தவொரு கிரையமும் இந்த நம்பர் பிரதிவாதி வாங்கவில்லை. தாவா சொத்து சம்பந்தமாக UDR பட்டாவில் பிழை இருப்பதாக சொல்லி இந்த நம்பர் பிரதிவாதி சிவகங்கை மாவட்ட வருவாய் அலுவலர் இடத்தில் முறையிட்டு தாக்கல் செய்த மனுவில் என்னையும் எதிர்மனுதாரராக சேர்க்கப்பட்டு நான் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி முறையான விசாரணைக்கு பின்னர் இந்த நம்பர் பிரதிவாதிக்கு தாவா சொத்து பொறுத்து அவரது பெயரில் பட்டா ஏற்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது எனது தகப்பனாருக்கு தான் தெரியும்.

8) மேற்படி விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றாலும் வேண்டுமென்றே எனது நிரூபண வாக்குமூலத்தில் மேற்கண்ட விவரத்தை மறைத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எனது அப்பத்தா காளியம்மாள் தாவா சொத்தைப் பொறுத்து இந்த பிரதிவாதியை தவிர்த்து வேறு யாருக்கும் ஆவணங்கள் எதுவும் ஏற்படுத்தி கொடுத்தாரா என்றால் எனது தகப்பனாருக்கு தான் எழுதிக்கொடுத்தார். எனது தகப்பனாருக்கு எழுதிக் கொடுத்ததாக சொல்லப்படும் ஆவணம் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

9) பொதுவாக ஒரு சொத்தைப் பொறுத்து ஆவணம் ஏற்படுத்த வேண்டுமெனில் எழுதிக் கொடுப்பவருக்கு உரிமை மூல ஆவணம் இருக்க வேண்டும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 எனது தகப்பனார் எனக்கு எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் ஆவணத்தில் எனக்கு பூர்வீக பாத்தியமானது என் பெயரால் 1445 நம்பராக பட்டா ஏற்பட்டும் என்னுடைய தனித்த அனுபோக ஸ்வாதீனத்திலும் ஆளுகையிலுமிருந்தும்

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.03.06 14:01:47 +0530

வருகிறதும் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனார் பெயரில் தான் பட்டா இருந்து வந்தது என்பதை நிரூபிக்க நான் மேற்படி பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

10) மேற்படி பட்டா எண்ணில் எனது தகப்பனாருக்கு எவ்வித பட்டாவும் இல்லை என்றாலும் அது போலியாக கொடுக்கப்ட்டு ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் 4 வது பக்கத்தில் கடைசி வரியில் பழைய பட்டா எண். 19 ஆக இருந்துள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதன் விவரம் எனக்கு தெரியவில்லை. அந்த பழைய பட்டா எண்ணையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

11) தாவா சொத்து எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது என்பதைக்காட்ட நான் ஏதேனும் வருவாய் ஆவணமோ வேறு எந்த ஆவணமோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. நான் அவ்வாறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக நினைவில்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தில் எனது தகப்பனாருக்கு எவ்வித பாத்தியமும் உரிமையும் இல்லாத நிலையில் வா.சா.ஆ.1 ஆவணத்தை போலியாக உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

12) வா.சா.ஆ. 2 மூலம் நான் பட்டா கேட்டு வட்டாட்சியரிடம் கொடுத்த மனு மீது என்ன நடவடிக்கை எடுக்கபட்டது என்ற விவரத்தை நான் எனது பிராதிலோ நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் விசாரணைக்கு வரச்சொன்னார்கள் எனது தகப்பனார் இறந்துவிட்டதால் நான் விசாரணைக்கு ஆஜராகவில்லை மேற்கண்ட சங்கதிகளை நான் எனது பிராதிலோ நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்ற விவரம் எனக்கு தெரியவில்லை.

13) எனது தகப்பனார் எனக்கு வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதிக்கொடுத்த போது நானும் சார்பதிவாளர் அலுவலத்திற்கு சென்றேனா என்றால் நானும் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றேன். பொதுவாக ஒரு சொத்தை வாங்கும்போதோ விற்கும்போதோ வில்லங்கம் பார்த்து தான் பதிவு

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.03.06 14:01:53 +0530

செய்வார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தைப் பொறுத்து ஏற்படுத்தப்பட்ட வா.சா.ஆ.1 ஆவணத்தை பதிவு செய்வதற்கு முன்பாக வில்லங்கம் எதுவும் பார்த்தேனா என்றால் அது எனது தகப்பனாரைக் கேட்டால் தான் தெரியும்.

14) நான் வில்லங்கம் பார்த்தேன் என்றாலும் அதில் 1961, 1966, 1994 ஆம் ஆண்டுகளில் தாவா சொத்தைப் பொறுத்து வில்லங்கம் ஏற்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தை வில்லங்க விவகாரங்களுக்கு உட்படுத்த வேண்டும் என்று எண்ணி போலியாக வா.சா.ஆ.1 ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த சமயத்திலேயே தாவா சொத்தின் புல எண். 96/9 லிருந்து 96/9A, 96/9B உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் நான் வழக்கின் தோதிற்காக அதனை மறைத்து வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

15) பொதுவாக சொத்தின் நான்குமால் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் அருகாமையில் உள்ள சொத்துக்களை வாங்கும் நபர்களைப் பொறுத்து மாறுபடும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் 1966 ஆம் ஆண்டு ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள நான்குமாலோடு ஒப்பிட்டு 2009 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட ஆவணத்தில் தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தில் முள்வெட்ட சென்றபோது பிரதிவாதி தடுத்ததாக எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள நிலையில் அது சம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் ஏதேனும் புகார் கொடுத்துள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு நினைவில்லை.

16) தாவா சொத்தை 1994 ஆம் ஆண்டு முதல் பிரதிவாதி தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்தை நான் அனுபவம் செய்து வருவதைக்காட்ட நான் ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது அப்பத்தா காளியம்மாள் கையொப்பம் அல்லது கைரேகை செய்துள்ள அசல் ஆவணங்கள் எதையாவது நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அப்படி எந்த ஆவணமும் நான் தாக்கல்

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.03.06 14:02:00 +0530

செய்யவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

17) தாவா சொத்து எனது அப்பத்தாவிற்கு சுய சம்பாத்தியத்தின் பேரில் கிடைக்கப்பட்ட சொத்து என்பதால் அதனை பொறுத்து எனது தகப்பனாருக்கு எவ்வித ஆவணமும் ஏற்படுத்திக்கொடுக்க தனிப்பட்ட உரிமை ஏதும் இல்லை என்றாலும் எவ்வித உரிமையும், ஆவணமும் இல்லாமல் தாவா சொத்தைப் பொறுத்து எனக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட ஆவணம் சட்டப்படி செல்லாது என்றாலும் சரியல்ல. தாவா சொத்தைப் பொறுத்து கிரைய ஆவணங்களும் வருவாய் ஆவணங்களும் இந்த பிரதிவாதி பெயரில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பிரதிவாதிக்கு உரிமையும் அனுபவமும் இருந்து வருகிறது என்றாலும் எனக்கு தாவா சொத்தில் எவ்வித உரிமையும் அனுபவமும் இல்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்தைப் பொறுத்து நான் தாக்கல் செய்துள்ள பிராதிலும் நிரூபண வாக்குமூலத்திலும் பொய்யான சங்கதிகளை தெரிவித்துள்ளதால் நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**(மறுவிசாரணை இல்லை. )**

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.03.06 14:02:07 +0530

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam